DEPOSITION OF WITNESS

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்**

**CC.No. 109/2024**

Prosecution **PW.2**

Court

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | திரு.முகமுது ஜாபர் | கிராமம் : | |
| தந்தை பெயர் : | முகமது ரபீக் | வட்டம் : | |
| மதம் : | | தொழில் : | |
| ஜாதி : | | வயது : | 42 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.03.2026

1, 2 எதிரிகள் ஆஜரில்லை. .சட்டப்பிரிவு 355 BNSS படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கோவை மாநகரம் மாநகர குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் 1, 2 எதிரிகளைத் தெரியும். கடந்த 16.10.2017 ம் தேதி நான் மாயனூர் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது மாயனூர் காவல் ஆய்வாளர் திரு.ராஜசேகரன் மற்றும் SSI கதிரேசன் மற்றும் காவலர் சுந்தரமூர்த்தி ஆகியோர்களுடன் காவேரி ஆற்றில் மணல் திருட்டு நடப்பது சம்பந்தமாக ரோந்து சென்ற போது வீரராக்கியம் பிரிவு அருகில் TN 24 C 1759 என்ற லாரியில் மணல் ஏற்றி வந்துக் கொண்டிருந்த வரை பிடித்து விசாரிக்க அவர் பெயர் மணிவண்ணன் என்றும் அவர் கடலூாரைச் சேர்ந்தவர் என்றும் அவரை விசாரித்து காவல் ஆய்வாளர் அவர்களால் காலை 05.00 மணிக்கு கைது செய்தும் அவர் தானாக முன்வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை தனிநபர் சாட்சிகள் இல்லாததால் காவல் சாட்சிகளான நான் மற்றும் SSI கதிரேசன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தும் எதிரி ஆஜர் செய்த மேற்படி லாரி மற்றும் 3 யூனிட் மணலையும் மகஜரில் காலை 06.30 மணிக்கு கைப்பற்றியும் பின்னர் எதிரி மற்றம் தடயங்களுடன் காவல் ஆய்வாளருடன் பாரா வசம் ஒப்புவிக்க காவல் ஆய்வாளர் அவர்களுக்கு உதவியாக இருந்தேன். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார். தற்போது

என்னிடம் காட்டப்படும் மணிவண்ணன் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான் . **(மணிவண்ணன் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

<u>1, 2 **எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**</u>

1. கரூர்–திருச்சி தேசிய நெடுஞ்சாலை போக்குவரத்து மிகுதியாக சாலை என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு ரோந்து பணிக்கு எத்தனை நபர்கள் சென்றோம் என்றால் முதல் விசாரணையில் சொன்ன நபர்களை தவிர வேறு யாரும் செல்லவில்லை. என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் தட்டச்சு எப்படி செய்யப்பட்டது என்றால் மடிக்கணினியில் செய்யப்பட்டது. மடிக்கணினியில் யாருடையது என்றால் ஆய்வாளருடையது.

2. ஆய்வாளர் எப்போதும் மடிக்கணிணி எடுத்து வருவரா என்றால் எடுத்து வருவார். மடிக்கணிணி எந்த பிராண்ட் என்றால் எனக்குத் தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள வாசகங்கள் தமிழில் தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் ஆமாம். ஒப்புதல் வாக்கு மூலத்தை யார் தட்டச்சு செய்தார்கள் என்றால் ஆய்வாளர் தட்டச்சு செய்தார். ஆய்வாளருக்கு தமிழ் தட்டச்சு தெரியுமா என்றால்தெரியும். ஆய்வாளருக்கு ரகசிய தகவல் கிடைத்த விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

3. கைப்பற்றிய வாகனம் கரூரில் இருந்து திருச்சி சென்றதா இல்லை திருச்சியில் இருந்து கரூர் வந்ததா என்றால் ஞாபகமில்லை. கைப்பற்றிய வாகனம் பைபாஸ் ரோட்டில் பிடித்திர்களா இல்லை வீரராக்கியம் பிரிவு ரோட்டில் பிடித்தீர்களா என்றால் வீரராக்கியம் செல்லும் பிரிவு ரோட்டில் பிடித்தோம். கைப்பற்றிய வாகனம் வந்த போது ஓவர் டேக் எடுத்து பிடித்தோமா என்றால்

நிறுத்தச்சொல்லி பிடித்தோம். வாகனம் வந்த போது நாங்கள கீழே நின்று கொண்டிருந்தோமா என்றால் ஆமாம்.

4. கைப்பற்றிய வாகனம் ஈச்சர் லாரியா, டிப்பர் லாரியா, டாரஸ் லாரியா என்றால் ஞாபகமில்லை. உண்மையில் ரோந்து சென்றிருந்தால் என்ன வகையான லாரி என்று தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. 16.10.2017 ம் தேதி எத்தனை மணிக்கு காவல் நிலையம் வந்தோம் என்றால் முதல் நாள் இரவு 10.00 மணியிருக்கும். காவல் நிலையம் பணிக்கு வரும் வருகை பதிவேட்டில் கையொப்பம் செய்யும் பழக்கம் உள்ளதா என்றால் இல்லை. 16.10.2017 ம் தேதி எத்தனை மணிக்கு பணிக்கு வந்தேன் என்பதை தினசரி நாட்குறிப்பை பார்த்தால் தெரியுமா என்றால் தெரியும்.

5. என்னுடன் ரோந்துக்கு வந்தவர்கள் எத்தனைமணிக்கு பணிக்கு வந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் பொது நாட்குறிப்பை பார்த்தால்தான் தெரியும். 16.10.2017 ம் தேதி நானும் என்னுடன் வந்த காவலர்கள் யாரும் ரோந்து செய்யவில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றிய வாகனத்தில் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் ஒருவர் தான் வந்தார் கூட யாரும் வரவில்லை. ஒப்புதல் வாக்குமூலத்தில் தனிநபர் சாட்சிகள் யாரும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான்.

6. தட்டச்சு செய்யப்பட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கு நகல் எடுக்க கொண்டு சென்றோம் எத்தனை மணிக்கு யார் கொண்டு சென்றோம் என்றால் காவல் ஆய்வாளர் அவர்கள் கொண்டு சென்றார். நகல் எடுக்க செல்லும் நாங்கள் யாரும் கூட செல்லவில்லை என்றால் சரிதான். யாரும் ரோந்து செல்லவில்லை எதிரிக்கு எதிராக பொய்யான வழக்கு தயார் செய்யப்பட்டுள்ளது அதற்கு நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம், கைப்பற்றுதல் மகஜர் காவல் நிலையத்தில வைத்து ஆய்வாளரால் தயார்

செய்யப்பட்டு நாங்கள் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. ஒப்புதல் வாக்குமூலம் நகல் எடுக்கச் சென்ற போது காவல் நிலையம் வந்தரா அல்லது கடைவீதி சென்றரா என்றால் அங்கேயே எடுக்கப்பட்டது. காலையில் 09.00 மணிக்கு முன்னாடி எந்த கடையும் கிடையாது நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை : இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

RAMAIYAH BAGYARAJ

Digitally signed by RAMAIYAH BAGYARAJ
DN: cn=RAMAIYAH BAGYARAJ, ou=MADURAI, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.30 17:05:21 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
கிருஷ்ணராயபுரம்.